## தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவகம் - 2011

### 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவகத்தின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) இலங்கை கணக்கீட்டு நியம இல. 10 இன் பிரகாரம்

I. முன்னைய ஆண்டு தொடர்பில் திருத்தப்பட்டிருந்த பெறுமானத்தேய்வு மற்றும் நிகழத்தக்க பொறுப்புக்கள் சம்பந்தமாக நிதிக்கூற்றுக்களில் செய்யப்படவேண்டிய வெளிப்படுத்தல்கள் செய்யப்பட்டிருக்கவில்லை.

II. நியம இல. 10.8 இன் பிரகாரம் நிறுவகத்திற்குப் பொறுப்பளிக்கப்பட்டிருந்த 02 ஏக்கர் 02 ரூட் விஸ்தீரணம் கொண்ட காணியின் ஆரம்பக் கிரய மீதியினை மீள வைத்தலாக கருதி சீராக்கத்தினை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்குப் பதிலாக ஆண்டின் சொத்துக் கொள்வனவாக காட்டப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியம இல. 16 இன் பிரகாரம் பணிக்கொடை ஏற்பாடு தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தல் செய்யப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் பணிக்கொடை ஏற்பாடு ரூபா 109,460 ஆல் கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) இலங்கை கணக்கீட்டு நியம இல. 18 இன் பிரகாரம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் விகிதாசார அடிப்படையில் பெறுமானத்தேய்வு செய்யப்படாதிருந்ததுடன் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 9,100,000 பெறுமதியான மோட்டார் வாகனம் நிலையான சொத்தொன்றாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) முன்னைய ஆண்டின் ரூபா 291 ஆன தொங்கல் கணக்கு மீதிக்கான காரணங்களை இனங்கண்டு திருத்தம் செய்வதற்குப் பதிலாக அந்த மீதி உரிமைத்துவ மாற்றங்கள் கூற்றில் சீராக்கப்பட்டிருந்தது.

(ஆ) கற்கைகள் மண்டபத்திற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 223,850 ஆன நாற்காலிகளின் பெறுமதியினை மூலதனமாக்காது மீண்டெழும் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) வகைப்படுத்தல் வழு காரணமாகவும் விகிதாசார அடிப்படையில் பெறுமானத்தேய்வு செய்யப்படாமையாலும் மீளாய்வாண்டிற்கான பெறுமானத்தேய்வு ரூபா 583,994 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) எதிர்வரும் ஆண்டிற்காக செய்யப்பட்டிருந்த ரூபா 147,170 ஆன செலுத்துகைகள் மீளாய்வாண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) ஆண்டின் போது கிடைத்திருந்த ரூபா 19,850,000 ஆன மூலதன மானியப் பெறுவனவுகள், உரிமைத்துவ மாற்றங்கள் கூற்றின் கீழ் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

முன்னாள் தலைவர் ஒருவரினால் நிறுவகத்திற்குச் சொந்தமான பொருட்களை மீள ஒப்படைக்காமை மற்றும் வாகனமொன்றை அனுமதியின்றி பயன்படுத்தி விபத்திற்குள்ளாக்கியிருந்தமை காரணமாக நிறுவகத்திற்கு ஏற்பட்டிருந்த நட்டத்திற்காக அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகை ரூபா 282,227 ஆன போதிலும் நிதிக்கூற்றுக்களில் பெறவேண்டிய பெறுமதியென ரூபா 57,226 மாத்திரமே காட்டப்பட்டிருந்தது.

### 1.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களிற்கான தொடர்பு | இணங்கி ஒழுகாமை |
|---|---|
| (அ) நிதிப்பிரமாணம் | காசுப் புத்தகத்தினை பேணிச்செல்லல், |

| | |
|---|---|
| I. நிதிப்பிரமாணம் 395(ஊ) | காசோலையினை எழுதுதல், வங்கிக் கணக்கிணக்கக் கூற்றினை தயாரித்தல், நாளாந்தம் பணத்தினை வங்கியில் வைப்புச் செய்தல் போன்ற பணிகள் ஒரே உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட்டிருந்தன. |
| II. நிதிப்பிரமாணம் 396(இ) | 2011 திசெம்பர் 31 இல் தயாரிக்கப்பட்டிருந்த வங்கிக் கணக்கிணகக் கூற்றின் படி 06 மாதங்களைத் தாண்டிய ரூபா 59,996 பெறுமதியான 54 காசோலைகள் காணப்பட்டதுடன் அது சம்பந்தமாக நி.பி. ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| III. நிதிப்பிரமாணம் 446(2) | காசுப் புத்தக மீதி சமப்படுத்தும் சந்தர்ப்பங்களிலும் ஆண்டின் இறுதியில் காசு மீதி சரியாக உள்ளதென்றும் பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர் ஒருவர் கையொப்பமிட்டு உறுதிப்படுத்தியிருக்கவில்லை. |

(ஆ) சுற்றறிக்கைகள்

| | |
|---|---|
| 2004/நூசே/1 ஆம் இலக்க தேசிய நூலக மற்றும் சுவடிக்கூடச் சேவைகள் சபையின் ஆலோசனைச் சுற்றறிக்கை- 3.1 மற்றும் 3.2 ஆம் பந்திகள் | வருடாந்த இருப்பு மெய்மையாய்வினையும் நூலக அதிகாரி சேவை இடமாற்றம் பெற்றுச்செல்லும் சந்தர்ப்பங்களில் இருப்பு மெய்மையாய்வொன்றையும் கட்டாயமாக மேற்கொள்ள வேண்டிய போதிலும் 2012 மே 02 ஆந் திகதி வரை அத்தேவைப்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2006 ஜனவரி 25 ஆந் திகதிய 8 ஆம் இலக்க தேசிய கொள்வனவுகள் முகவர் நிலையத்தின் கொள்வனவுகள் வழிகாட்டல்கள் கையேட்டின் 2.8.1(அ) ஆம் பிரிவு | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினை நியமனம் செய்யாது ரூபா 113,200 இற்கு குளிரூட்டி இயந்திரம் ஒன்றும் ரூபா 250,000 இற்கு மல்ரி மீடியா புரொஜக்டர் இரண்டும் ரூபா 139,600 இற்கு நிழற்படப் பிரதி இயந்திரமொன்றும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. |
| (ஈ) 2007 இன் 26 ஆம் இலக்க தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவக அதிகாரச்சட்டத்தின் 15(1) ஆம் பிரிவு | நிறுவனத்தின் முன்னேற்றத்திற்காக எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகளின் விளைவுதிறன், பிரச்சினை களைத் தீர்த்தல் மற்றும் அபிவிருத்தி மீதான கலந்துரையாடலிற்கு சபையொன்றை தயார் படுத்துவதற்காக தேசிய நல்லிணக்க விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் |

சபையொன்று நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிறுவக செயற்பாடுகளின் பின்னரான நிதி விளைவுகள் ரூபா 997,495 மிகையொன்றானதுடன் அதனையொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 3,868,516 ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 4,866,011 வளர்ச்சி ஏற்பட்டிருந்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் வருமானம் 117% ஆல் அதிகரித்திருந்தது. விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | 2011 | 2010 | வேறுபாடு | |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| பயிற்சிப் பாடநெறிகளிலிருந்து வருமானம் | 5,027,877 | 885,000 | 4,142,877 | 468.12 |
| புத்தக விற்பனை வருமானம் | 1,085,040 | 2,477,835 | 1,392,795 | (56.21) |

### 2.3 செலவின அதிகரிப்பு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் செலவினங்கள் 85% தொடக்கம் 360% இற்கு இடையில் அதிகரித்திருந்தமையை காண முடிந்தது. விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | 2011 | 2010 | வேறுபாடு | |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| வழங்கல் | 805,154 | 435,940 | 369,214 | 84.69 |
| நிதிச் செலவினம் | 72,380 | 15,750 | 56,630 | 359.55 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடங்கியிருந்த பின்வரும் செயற்பாடுகள் ஆண்டில் செயற்படுத்தப்படாதிருந்ததுடன் சில செயற்பாடுகள் மதிப்பிடப்பட்ட இலக்குளை அடைந்திருக்காமையும் அவதானிக்கப்பட்டது.

| திட்டமிடப்பட்ட நிகழ்ச்சிகள் | இலக்கிடப்பட்ட செலவினம் | உள்ளபடியான செலவினம் | பௌதீக இலக்கு | இலக்கு அடையப்படாமை |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | | |
| 01. மொழிக் கல்வி நடவடிக்கைகள் மீது இந்தியக் கல்வி நிறுவனத்திற்கான சுற்றுலா | 1,400,000 | - | 01 | - |
| 02. உத்தியோகபூர்வ இல்லங்கள் 2 இனை ஸ்தாபித்தல் | 10,500,000 | - | 01 | - |
| 03. வாசிப்போரிற்காக மும்மொழி வள உபகரணத் தொகுதியொன்றைத் தயாரித்தல் | 350,000 | - | 01 | - |
| 04. நிறுவனங்களின் கோரிக்கைகளிற்கமைய நடாத்தப்படுகின்ற விசேட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் | 236,000 | 446,793 | 05 | 02 |
| 05. பாடநெறிகளை ஒழுங்குசெய்தல் மற்றும் திட்டமிடல் செயலமர்வுகள் | 500,000 | 337,044 | 05 | 04 |
| 06. மாகாண மட்டத்தில் மொழிப் பயிற்சி நிலையங்கள் | 4,800,000 | 1,214,596 | 04 | 01 |

| | | | | |
|---|---|---|---|---|
| 07. வீடியோ விவரண நிகழ்ச்சித்திட்டமொன்றை படைத்தல் | 100,000 | 699,595 | 01 | 01 |

**முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நூலக அதிகாரி 2011 நவம்பர் 30 ஆந் திகதி பதவியிலிருந்து விலகியிருந்ததுடன் அது தொடக்கம் நூலகம் மூடப்பட்டுள்ளமை 2011 மே 02 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனைகளில் வெளிப்பட்டது.

(ஆ) 2010 ஆம் ஆண்டிற்கான விடுமுறைகள் பதிவேடு முறைப்படி பேணிச்செல்லப்பட்டிராமை குறித்து கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும் 2011 ஆம் ஆண்டு வரைக்கும் அது முறைப்படி தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறிருக்கையிலும் 2011 ஆம் ஆண்டில் இரண்டு உத்தியோகத்தர்களினால் முன்னைய விடுமுறைகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன.

(இ) தொழில்நுட்ப மதிப்பீட்டுச் சபை அறிக்கையொன்றின்றி சமர்ப்பிக்கப்பட்டிருந்த குறைந்த விலைமனுவை நிராகரித்தமைக்கான காரணங்களைக் குறிப்பிடாது அதனைக் காட்டிலும் ரூபா 23,200 கூடிய விலையினைச் சமர்ப்பித்திருந்த நிறுவனத்திடமிருந்து இரண்டு குளிரூட்டிகளைக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

## 3.3 பதவியணி முகாமைத்துவம்

(அ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதவியணியினர் நிலைமை பின்வருமாறு காணப்பட்டது.

| பதவிகள் | அங்கீரித்த பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. நிறைவேற்றுத்தரம | 10 | 03 | 07 |
| 2. நிறைவேற்றுத்தரமற்ற | 09 | 06 | 03 |
| 3. ஏனையோர் | 08 | 07 | 01 |
| மொத்தம் | 27 | 16 | 11 |

===== ===== =====

(ஆ) நிறுவகத்திற்குச் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்த நிர்வாக உத்தியோகத்தரினால் தனியார் நிறுவனமொன்றில் 16 ஆண்டுகள் சேவையாற்றியுள்ளதாக சமர்ப்பித்திருந்த சான்றிதழில் அந் நிறுவனத்தின் முகவரியோ அல்லது தொலைபேசி இலக்கமோ குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. அவ் உத்தியோகத்தரின் சேவை நிலையம் அகலவத்தையிலுள்ள அலுவலகமான போதிலும் கொழும்பு அலுவலகத்தில் வருகைகள் மற்றும் வெளியேறல்கள் கையொப்பமிடப்பட்டிருந்தன.

## 4. கணக்கீட்டுச் செயற்பாடுகள் மற்றும் நல்லாளுகை

### 4.1 கூட்டுத் திட்டம்

அரசாங்க முயற்சிகள் திணைக்களத்தின் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 5.1.3 ஆம் பிரிவு மற்றும் 2007 திசெம்பர் 18 ஆந் திகதிய பீஈடீ 47 ஆம் இலக்க சுற்றறிக்கைகளின் பிரகாரம் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கூட்டுத் திட்டம் மற்றும் நாளதுரையாக்கப்பட்ட பாதீடு நிதியாண்டு தொடங்குவதற்கு 15 நாட்களுக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 2011 – 2014 ஆம் ஆண்டிற்கான கூட்டுத் திட்டம் 2011 ஆகஸ்ட் 10 ஆந் திகதியன்றே பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

### 4.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

நிறுவகத்தின் நோக்கங்கள் மற்றும் இலக்குகளுடன் அந்தந்த செயற்பாடுகளிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புக்களை தெளிவாக இனங்காட்டக்கூடியதாக 2011 ஆம் ஆண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 05. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத் தலைவரது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) உள்ளகக் கட்டுப்பாடு

(ஆ) வாகனப் பயன்பாடு

(இ) ஒப்பந்த நிர்வாகம்

(ஈ) நூலக நிர்வாகம்

(உ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஊ) கணக்கீடு

(எ) நிதிக் கட்டுப்பாடு